கிருபையுள்ள வார்த்தை®

KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

Vol - 24 | ஜூலை JULY | 2023

ஆண்டு சந்தா ரூ. 100/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-

தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூர வேண்டும்...

– 1 யோவான் 4:21

கௌரவ ஆசிரியர் BETTY CHOATE

ஆசிரியர் பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

இதழின் உள்ளே...

ஆசிரியர் உரை	3
பெண்கள் பகுதி	9
வாலிபர் பகுதி	10
சிறுவர் பகுதி	11

In memory of J.C. CHOATE

Guest Editors : **Betty Choate, Jerry & Paula Bates**

Editor : **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

V. கிங்ஸ்லி ராஜா. M.Th.,
R. ஆண்டனி ராஜா. D.Th.,M.B.A (Bible Studies)
Dr. V.S. இம்மானுவேல். M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்.** B.Sc.,
P. பேபி ராஜா D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L

கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

நம்பிக்கை T.V. யில்

ஞாயிறு மதியம் 3:30 மணி

தமிழன் T.V. யில்

ஞாயிறு காலை 7:00 மணி

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)
சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

OUR ENGLISH TV PROGRAM

SALVATION TV

Every Sundays 2pm

Speakers:

Jerry Bates & Kingsly Rajah

வாசகர்கள் கவனத்திற்கு !

உங்களுக்கு அனுப்பப்படும் நமது மாத இதழ், சரியான காரணமின்றி சில நேரங்களில் திரும்பி வருவதால், உங்களுடைய தெளிவான முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை எங்களுக்கு அனுப்பிவைக்கவும்.

Phone : 92 4421 4421, 92 4431 4431, 99 9426 7004

கிருபையுள்ள வார்த்தை

நம்மைப் போல பிறரையும் நேசிக்கத் தூண்டும் ஆத்தும நேசர் இயேசுவின் வார்த்தை.

World Literature Publication : Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

உன்னைப்போல் பிறரையும் நேசி

LOVE OTHERS AS YOURSELF

ஆசிரியர் உரை
Dr. P.C. பிலேமோன் ராஜா

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால் அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

இந்த மாதம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து கற்றுக்கொடுத்த பிரதான கட்டளைகளில் ஒன்றாகிய **"உன்னைப்போல் பிறனையும் நேசி"** என்பதனை குறித்து தியானம் செய்வோம்.

இந்த தலைப்பினை படிக்கும் போதே நமக்குள், ஏன் நான் என்னை நேசிப்பது போல மற்றவர்களையும் நேசிக்க வேண்டும்? என கேள்வி எழும்பியிருக்க வாய்ப்புள்ளது. அது ஒன்றும் ஆச்சரியமில்லை. சில நேரங்களில் ஏன் என்ற கேள்வி கேட்டு படிப்பது இன்னும் நம்மை ஆழமாக படிக்க வைக்கவும், அர்ப்பணிப்புடன் வாழ வைக்கவும் உதவுவதாக இருக்கின்றது.

ஏன் என்னை நான் நேசிப்பது போல மற்றவர்களையும் நேசிக்க வேண்டும்? அதனுடைய அவசியம் (முக்கியத்துவம்) என்ன? போன்ற நமது கேள்விகளுக்கு பைபிள் நமக்கு பதில் தருகின்றது.

ஆண்டவர் இயேசு, நித்திய வாழ்வு வேண்டி வந்தவரிடம் இரண்டு கட்டளைகளை நினைவுப்படுத்துகின்றார். (ஒன்றை முதலாவது என்றும் மற்றொன்றை இதற்கு சமமான இன்னொரு கட்டளை எனவும் குறிப்பிடுகின்றார்.) அந்த இரண்டு கட்டளைகளும் சமமானது என்றும் சொல்கின்றார். அது தான் நாம் கவனிக்க வேண்டிய பகுதியாக உள்ளது. கர்த்தரை நேசி என்பது மேலானது, மனிதர்களை நேசி என்பது குறைவானது என அவர் சொல்லவில்லை. நேசிக்க வேண்டிய விதத்தில் தான் வித்தியாசம் காண்பிக்கின்றார். அதாவது கர்த்தரை முழுவதுமாகவும், அவர் சாயலில் உண்டாக்கப்பட்ட மனிதர்களை ஒருவரையொருவர் தன்னைப்போல நேசிக்க சொல்கின்றார். அதனால் உன்னை போல் பிறனையும் நேசி என்ற கட்டளையை நாம் குறைத்து மதிப்பிட முடியாது. ஏனெனில் அது கர்த்தரை நேசிப்பதற்கான கட்டளைக்கு ஒப்பான (சமமான) முக்கியத்துவம் வாய்ந்த கட்டளையாகும்.

யோவான் 15:12 "நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது."

ஆண்டவராகிய இயேசுவும், அவருடைய அடியார்களாகிய அப்போஸ்தலர்களுக்கும், நமக்கும் "நான் உங்களை நேசிப்பது போல நீங்களும் பிறரை நேசியுங்கள்'' என்பதனை கட்டளையாக கொடுத்துள்ளார். மேலும், பிறரிடத்தில் அன்புகூறுகிறவன் நியாயபிரமாணத்தினை நிறைவேற்றுகிறான் என ஆவியானவர் திருவுளம் பற்றுவதிலிருந்து அதின் முக்கியத்தினை அறிய முடிகின்றது. **ரோமர் 13:8** "ஒருவரிடத்திலொருவர் அன்புகூறுகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூறுகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்.

யோவான் புத்தகம் ஆண்டவர் இயேசு மற்றவர்களிடத்தில் எவ்வாறு அன்பாக இருந்தார், எப்படி தன்னை போல பிறரையும் நேசித்தார் என்பதனை சொல்வது போல, 1 யோவான் புத்தகம் தன்னைப் போல பிறனையும் நேசிக்க வேண்டிய அவசியத்தினை சொல்லுகின்ற அன்பின் புத்தகமாகும். அதில் மற்றவர்களிடத்தில் அன்பாக இருப்பவர்களின் நிலை பற்றியும், அவர்கள் பெறப்போகும் வெகுமதியினைப் பற்றியும் மற்றும் அன்பாக இல்லாதவர்களின் நிலைபற்றியும், அவர்கள் அடையப் போகும் தண்டனை பற்றியும் தெளிவாக கூறப்பட்டுள்ளது. **1 யோவான் 3:14,15** "நாம் சகோதரரிடத்தில் அன்பு கூறுகிறபடியால், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்; சகோதரனிடத்தில் அன்பு கூறாதவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான். தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள்.

நாம் யாரையெல்லாம் நம்மை நேசிப்பது போல நேசிக்க வேண்டும் என கேள்வி நமக்குள் எழும்புமென்றால், பைபிள் அதற்கும்

பதிலளிக்கின்றது. நாம் நம்மை எதிரியாக எண்ணி நடத்துபவர்களை, நம்மை துன்பப்படுத்து கிறவர்களை, நம்மை சபிக்கிறவர்களை மற்றும் நம்மை அவமானப்படுத்திய அனைவரையும் நாம் நம்மை நேசிப்பது போல நேசிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். நம்மை நேசிப்பவர்களை மாத்திரம் நேசிப்பதல்ல, நம்மை நேசிக்காதவர்களையும் நேசிக்க வேண்டும். இதை செய்வது கடினமாக தோன்றலாம். ஒன்றை மனதில் வைப்போம் நேசிக்க எவ்வளவேனும் தகுதியற்ற என்னை ஆண்டவர் இயேசு நேசித்துக்கொண்டே இருக்கின்றார். இந்த சத்தியம் நம்மை நமது பிதாவை போல பூரண சற்குணமுடையோராக மாற்ற ஊக்கமாக உதவி செய்யும். **மத்தேயு 5:44-48** "உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார். உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா? ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்."

1. ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள்

ரோமர் 12:10 "சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்."

நான் என்னைப் போல் பிறனையும் நேசிப்பதை எவ்விதம் வெளிப்படுத்துவது என்ற கேள்வி நமக்குள் இருக்குமானால், பைபிள் அதற்கும் பதில் தருகின்றது. நான் என்னைப்போல் பிறனையும் நேசிப்பதை வெளிப்படுத்த, முதலாவதாக, பிறருக்கு முந்திக்கொண்டு மரியாதை கொடுக்க வேண்டும்.

நாம் எப்பொழுது முந்திக்கொண்டு மரியாதை செய்வோம்? கிறிஸ்துவின் சிந்தை **(பிலி 2:5-8).** நம்மைவிட மற்றவர்களை நாம் மேலானவர்களாக எண்ணும் போது தான் இது சாத்தியமாகும். **பிலி 2:3** "ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்."

நாம் யாரையும் அற்பமாக எண்ணக் கூடாது என்பதே பிதாவின் விருப்பம் மற்றும் நமக்கான எச்சரிக்கை. **மத்தேயு 18:10** "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவ தூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."

நாம் யாரையாவது அற்பமாக மற்றும் மதிப்பு குறைவானவர்களாக எண்ணுவது என்பது பாவம். மேலும், நாம் யாரை அவ்வாறு எண்ணுகின்றோமோ, அவர்கள் கர்த்தரிடம் நெருங்க தடையாக, இடையூறாக மாறக்கூடிய அபாயமும் இருக்கின்றது. ஏனெனில் யூதர்கள் யாரை அற்பமாக எண்ணினார்களோ, அவர்களை தேவ ஆலயத்திற்கும், தேவ சமூகத்திலிருந்தும் புறம்பே தள்ளினார்கள். அநேகருக்கு இடறல் உண்டாக்கினார்கள். அதினிமித்தம் ஆண்டவர் இயேசு அவர்களை அநேக முறை கடிந்துகொண்டார் **(மத்தேயு 18:6, 23:15).** தாங்கள் ஆபிரகாமின் சந்ததி என்று பெருமை பேசினபடியால், யோவான் திருமுழுக்கினரும் கடிந்துக்கொண்டார் **(மத்தேயு 3:9).** அப்போஸ்தலாகிய பவுலும், பேதுருவை கடிந்துக்கொண்டார் **(கலா 2:13-15).** ஆகையால் நம் எல்லாருக்கும் ஒரே தகப்பன் ஆதாம், ஒரே தாய் ஏவாள் ஆகியோரிடமிருந்து உண்டானவர்கள் என்ற சத்தியத்தின் சிந்தையுடன், எல்லாரையும் சமமாக நம்மில் ஒருவராக, நம்மை நேசிப்பது போலவே நேசித்து முந்திக்கொண்டு கனம் செய்கின்றவர்களாக இருப்போம்.

2. ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்யுங்கள்

கலாத்தியர் 5:13,14 "நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அனுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்."

நம்மை போல பிறரையும் நேசிப்பதை வெளிப்படுத்த, நாம் அன்பினாலே ஒருவருக்கொருவர் பணிவிடை செய்கின்றவர்களாக இருக்க வேண்டும். கர்த்தாதி கர்த்தரும், இராஜாதி ராஜாவுமாகிய ஆண்டவர் இயேசு பணிவிடை பெறும்படி வராமல், பணிவிடை (ஊழியம்) செய்ய தான் வந்தேன் என்று சொன்னார் **(மாற்கு 10:42-45).**

மேலும், சேவை கொள்வதில் அல்ல, சேவை செய்வதில் தான் உண்மையான மகிழ்ச்சி உள்ளது என்று யோசித்தார் மற்றும் காண்பித்தார் **(யோவான் 13:1-17).** நம் மீது கொண்ட அன்பினாலே, நம்மை மீட்கும்படியாக தம்மை தாமே தாழ்த்தி அடிமையின் உருவெடுத்து வந்தால் **(பிலி 2:5-8).** நாமும் நமது ஆண்டவர் இயேசுவை போல, தாழ்மையுள்ளவர்களாய் மற்றவர்களிடத்தில் அன்புகூறுவதினாலே பணிவிடை பெறுகின்றவர்களாக அல்லாமல் செய்கின்றவர்களாக இருப்போம்.

3. ஒருவருக்கொருவர் கீழ்ப்படியுங்கள்

எபேசியர் 5:21 "தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்."

நம்மை போல பிறரையும் நேசிப்பதை வெளிப்படுத்த, நாம் ஒருவருக்கொருவர் தெய்வ பயத்தோடே கீழ்ப்படிகின்றவர்களாக இருப்போம். அது என்ன தெய்வ பயத்தோடே கீழ்ப்படிவது? ஒருவர் சத்தியத்தின்படி கர்த்தருடைய வார்த்தையை சொன்னால் அதற்கு நாம் கீழ்ப்படிகின்றவர்களாக இருக்க வேண்டும். அதாவது அந்த காரியம் செயல் கர்த்தருக்கு உகந்ததாக, அவருடைய வார்த்தையின்படியே இருக்குமென்றால் அதற்கு நாம் கீழ்ப்படிந்து ஆகவேண்டும். அதுவே தெய்வ பயத்தோடே கீழ்ப்படிவதாகும்.

கீழ்ப்படிதல் என்பது மூன்று வகைப்படும், ஒன்று பரிசுக்காக கீழ்ப்படிவதாகும். அதாவது கர்த்தர் தருகின்ற ஆசீர்வாதம் மற்றும் நன்மைகளுக்காக கீழ்ப்படிவது **(உபா 28:1-14).** இரண்டாவது பயத்தினாலே கீழ்ப்படிவதாகும். கீழ்ப்படியாததினால் வரப்போகின்ற தண்டனைக்கும், தீமைக்கும் தங்களுக்கு வந்துவிடக்கூடாது என்ற பயத்தினாலே கீழ்ப்படிவதாகும் **(உபா 28:15-68).** இந்த இரண்டு வகையான கீழ்ப்படிதல் தான் நியாயப்பிரமாணத்திலே இஸ்ரவேலர்கள் செய்தது.

மூன்றாவது கீழ்ப்படிதல் என்பது பாசத்தினாலே கீழ்ப்படிவதாகும். அதாவது கர்த்தர் மீது நாம் கொண்ட அன்பினாலே அவருக்கு அடிபணிவதாகும். இதை தான் ஆண்டவர் இயேசு போதித்தார். **யோவான் 14:22,24** "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள்." இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக; ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம். என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ள மாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது."

பிதா நமக்கு தரப்போகின்ற பரிசு (பரலோகம்) அல்லது தண்டனை (நரகம்) ஆகியவற்றிற்காக கீழ்ப்படியாமல், அவர் நம் பிதா, நம்மை படைத்தவர், அவர் தான் நமக்கு எல்லாம் என்ற **பாசத்துடன்** கீழ்ப்படிகின்றோமா என்று சிந்தித்துப்பார்ப்போம். நாம் மற்றவர்களிடமும், அன்பினாலே, தெய்வ பயத்துடன் கீழ்ப்படிகின்றவர்களாக இருந்து **(1 பேதுரு 5:5).** நம்மைப் போல பிறரையும் நேசிக்கின்றவர்களாக இருப்போம்.

4. ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்

கொலோசெயர் 3:9,10 "ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே."

நம்மை போல பிறரையும் நேசிப்பதை வெளிப்படுத்த, நாம் ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருக்க வேண்டும். **அதற்கான காரணத்தினையும் சொல்கின்றார்.** நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாக இருக்கின்றோம் **(எபே 4:25).** மேலும், புதிய மனுஷனாகிய கிறிஸ்துவை தரித்துள்ளோம் **(கலா 3:27, எபே 4:24).** அதனாலே அன்பினாலே பொய் பேசாமல் உண்மை பேசச் சொல்லி, பைபிள் நம்மை உற்சாகப்படுத்துகின்றது.

பொய் என்பது பாவம் மற்றும் தீமையானதாகும். பாவம் ஒரு போதும் புண்ணியமாகாது, தீமை என்பது நன்மையும் உண்டாக்காது. ஆபத்திற்கு பாவமில்லை என பொய் பேசினால், பேராபத்தில் மாட்டிக்கொள்வது நிச்சயமே **(வெளி 21:8,27).** நம்மிடம் நாம் நேசிக்கின்ற யாராவது பொய் பேசினால் நமக்கு பிடிக்காது அல்லவா? நாமும் மற்றவர்களிடம் பொய் பேசாதிருந்து, நம்மை போல பிறரை நேசிப்போம்.

5. ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்

எபிரெயர் 3:13 ''ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்.

நம்மை போல பிறரையும் நேசிப்பதை வெளிப்படுத்த, நாம் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுகின்றவர்களாக இருக்க வேண்டும். பாவம் வஞ்சித்து அழிக்காதபடி அனைவரையும் கர்த்தருடைய வார்த்தையினால் காப்பாற்ற வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம்.

பாவம் மதியை மயக்கி வைக்கும் **(ஓசியா 4:11).** பாவம் மனதினை கடினமானதாக்கும் **(எபி 3:13).** பாவம் விசுவாசிக்கவிடாமல் தடை செய்யும் **(எபி 3:12).** பாவம் பிதாவைவிட்டு தூரப்படுத்தும் **(எபி 3:12).** பாவம் உறுதி தன்மையை உடைக்கும் **(எபி 3:14).** பாவம் அழிவை நோக்கி வேகமாக அழைத்து செல்லும் **(எபி 3:15).** ஆகையால் தான் நாம், பாவத்தினாலே ஏமாற்றப்பட்டவர்களை அதிலிருந்து வெளியே கொண்டுவர கர்த்தருடைய வார்த்தையினால் புத்திசொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றோம். இதுதான் நாம் அந்த ஆத்துமாக்களின் மீது கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்துவதாகும்.

சத்தியத்தினை சாந்தத்தோடும், வணக்கத்தோடும் சொல்ல வேண்டும் **(1 பேதுரு 3:15).** அவர்கள் மீது மனதுருக்கம்கொள்வோம் **(மத் 9:36).** அவர்களுக்காக கண்ணீர் சிந்துவோம் **(சங் 119:136).** அவர்களுக்காக ஜெபிப்போம் **(மத்தேயு 37, 38).** ஒருவரும் கெட்டுப்போகக்கூடாது என்ற பிதாவின் சித்தம் நிறைவேற, நாம் பிரயாசப்படுவோம். அவர்கள் மீதுள்ள நமதன்பை வெளிப்படுத்தி, கர்த்தருடைய நாமத்தினை மகிமைப்படுத்துவோம்.

6. ஒருவருக்கொருவர் விரோதமாய் பேசாதிருங்கள்

யாக்கோபு 4:11 "சகோதரரே, ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள்; சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, தன் சகோதரனைக் குற்றப்படுத்துகிறவன் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய்ப்பேசி நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துகிறான்; நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துவாயானால், நீ நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவனாயிராமல், அதற்கு நியாயதிபதியாயிருப்பாய்."

நம்மை போல பிறரையும் நேசிப்பதை வெளிப்படுத்த, நாம் ஒருவருக்கொருவர் விரோதமாக பேசாதவர்களாக இருக்க வேண்டும். ஆம்! நாம் செய்கின்ற தவறுகளை யாராவது பரப்பி நம்மை அவமானப்படுத்தினால், நிச்சயம் பிடிக்காது அல்லவா? நாமும் மற்றவர்களை அவ்வாறு செய்ய கூடாது என பைபிள் போதிக்கின்றது. **யாக்கோபு 5:9** "சகோதரரே, நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள்; இதோ, நியாயதிபதி வாசற்படியில் நிற்கிறார்."

மாறாக, நாம் செய்ய வேண்டியது, தவறு செய்தவர்களை சீர்பொருந்தபண்ண வேண்டும். அதுவே கிறிஸ்துவின் பிரமாணத்தினை நிறைவேற்றுவதாகும். **கலா 6:1,2** "சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப் பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். ஆகையால் தவறுகளை சுட்டிகாட்டி திருத்துவோம். மாறாக, குத்திகாட்டி அவர்களை ஆத்துமாவிலே கொன்றுவிட வேண்டாம். பிதா மன்னிக்க தயை பெருத்து இருக்கும்போது, நாம் யோனாவைப் போல செயல்படுவதில் நியாயமில்லை என்பதை உணர்ந்து, நம்மை போல பிறரையும் நேசிப்போம்.

7. ஒருவருக்கொருவர் ஜெபம் பண்ணுங்கள்

யாக்கோபு 5:16 ''உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்."

நம்மை போல பிறரையும் நேசிப்பதை வெளிப்படுத்த, நாம் ஒருவருக்கொருவர் ஜெபிக்கின்றவர்களாக இருக்க வேண்டும். நம்மிடம் தினந்தோறும் ஜெபிக்கின்ற பழக்கம் இருக்கின்றது. ஆனால் மற்றவர்களுக்காக ஜெபிக்கின்றோமா? நமது தேவைகளை தேவாதிதேவனிடத்தில் தெரியப்படுத்துவது போல, பிறரின் தேவைகளையும் தெரியப்படுத்துகின்றோமா? நமது வலிகளை கண்ணீர் மற்றும் பெருமூச்சுடன் அவரிடம் ஒப்பவிப்பது போல, பிறருடைய வலிகளையும் நமது வலியாக உணர்ந்து பாரத்துடன் ஜெபிக்கின்றோமா? சற்று சிந்தித்து பார்த்து, நம்மை நாமே சீர்படுத்திக் கொள்வோம்.

யோபுவின் சரித்திரம் நமக்கு கற்றுக்கொடுக்கும் பாடங்கள் ஏராளம், அதில் ஒன்று, யோபு தனக்காகவும், தன் பிள்ளைகளுக்காகவும் கர்த்தரிடம் பலி செலுத்தி, வேண்டிய போது, எல்லாம் இழந்து போனான் **(யோபு 1:1–2:10).** மாறாக, அவன் பிறருக்காக பலி செலுத்தி வேண்டிய போது (ஜெபித்த), கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினதுமன்றி, இரண்டு மடங்கு ஆசீர்வதித்தார் **(யோபு 42:1–10).** நாம் நமக்காக வாழும்படி அல்ல, கர்த்தருக்குள் பிறருக்காக வாழும்படி அழைக்கப்பட்டவர்கள் என்பதனை நினைவில்கொள்வோம். **பிலிப்பியர் 2:4,5** "அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக, கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது."

8. ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்

1 பேதுரு 4:10 "தேவனுடைய ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்."

நம்மைப் போல பிறரையும் நேசிப்பதை வெளிப்படுத்த, நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். பைபிள் உதவி செய்வதை மிகவும் உற்சாகப்படுத்துகின்றது. கர்த்தர் கொடுக்கின்றவராக இருப்பது போல, அவரது பிள்ளைகளாகிய நம்மையும் கொடுக்கின்றவர்களாகவே இருக்கச் சொல்கின்றார். முதலாம் நூற்றாண்டிலே சபையானது வேகமாக வளர்ந்ததற்கு இதுவும் ஒரு காரணமாகும் (அப்போ 2-5 அதிகாரங்கள்). இன்று அதே நேரத்தில் வளர்ந்தமைக்கு காரணம் என்ன? நாம் உதவி செய்வதற்கு பதிலாக, நாம் சபைக்கு செய்வதற்கு பதிலாக, சபை நமக்கு என்ன செய்யும் என்ற நினைப்பும் செயல்களும் தான்.

நன்மை செய்வது என்பது சோர்வினை உண்டாக்கலாம், ஆயினும் நாம் சோர்ந்து போகாமல் நன்மை செய்ய வேண்டியவர்கள் என்பதனை மறந்துவிட வேண்டாம். **கலா 6:6–10** "மேலும், திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன். மோசம் போகாதிருங்கள். தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான். நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம். ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்."

9. ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்

கொலோசெயர் 3:12,13 "ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு, ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்."

நம்மை போல பிறரையும் நேசிப்பதை வெளிப்படுத்த, நாம் ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். அந்த மன்னிப்பு கிறிஸ்து நமக்கு கொடுத்த மன்னிப்பை போலவும், கிறிஸ்துவிற்குள் பிதா நம்மை மன்னித்தது போலவும் இருக்க வேண்டும். **எபேசியர் 4:32** "ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்."

நாம், பிதாவிடமிருந்து மன்னிப்பை பெறுவது போல, பிறருக்கு மன்னிப்பை கொடுக்க வேண்டும்.

இன்னும் அழுத்தமாக ஆண்டவர் இயேசு சொன்னார் நீ மற்றவர்கள் உனக்கு செய்த தீமைகளை மன்னித்தால், நீ செய்த பாவங்களை, பரம பிதாவும் உனக்கு மன்னிப்பார். மேலும், நீ மன்னிக்காவிடில் மன்னிப்பை பெற முடியாது. அதாவது மன்னிப்பை சக மனிதர்களிடம் விதைக்காவிடில், பிதாவிடமிருந்து எனக்கான மன்னிப்பை அறுவடை செய்ய முடியாது. **மத்தேயு 6:14,15** "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்."

10. ஒருவருக்கொருவர் முன்மாதிரியாக வாழுங்கள்

1 தீமோ 4:12 "உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு."

நம்மை போல பிறரையும் நேசிப்பதை வெளிப்படுத்த, நாம் ஒருவருக்கொருவர் முன்மாதிரிகளாக வாழ வேண்டியவர்களாக இருக்கின்றோம். நாம் அனைவருக்கும் ஆகச் சிறந்த முன்மாதிரி ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே, நாம் அவரது அடிச்சுவடிகளில் தான் நடக்க வேண்டும். **1 பேதுரு 2:20** ''கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும்."

அவருடைய அடிச்சுவடுகளில் நாம் நடக்கும் போது, மற்றவர்களுக்கு நாம் முன்மாதிரியாக எப்படி கிறிஸ்துவை பின்பற்ற வேண்டும் என்ற மாதிரியை காண்பிக்கின்றவர்களாக இருக்க முடியும். **1 கொரிந்தியர் 11:1,2** ''நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள். சகோதரரே, நீங்கள் எல்லாவற்றிலும் என்னை நினைத்துக்கொண்டு, நான் உங்களுக்கு ஒப்புவித்தபடி நீங்கள் கட்டளைகளைக் கைக்கொண்டு வருகிறதினிமித்தம் உங்களைப் புகழுகிறேன்."

நான் முன்மாதிரியை சக மனிதர்களிடத்தில் தேடுகின்றவர்களாக அல்லாமல், சக மனிதர்களுக்கு முன்மாதிரியை காண்பிக்கின்றவர்களாக வாழ வேண்டும். அதனை கருத்தில்கொண்டு, கவனித்து நடப்போம். **தீத்து 2:7,8** ''நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து, எதிரியானவன் உங்களைக் குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், நல்லொழுக்கமுள்ளவனும் குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக."

இறுதியாக, பிரியமானவர்களே நாம் நம்மை போல பிறரை ஏன் நேசிக்க வேண்டும்? யாரை அவ்வாறு நேசிக்க வேண்டும்? அந்த நேசத்தினை (அன்பினை) எவ்வாறு வெளிப்படுத்த வேண்டும் என்பதனை பைபிள் வசனங்களின் துணைக் கொண்டு கற்றறிந்தோம். கற்றறிந்ததை செயல்படுத்தி **(யாக் 1:22).** கர்த்தருடைய நாமத்தினை மகிமைப்படுத்துவோம்.

அன்புடன்,
–ஆசிரியர்

சிறுவர்க்கான கேள்விகள்

1. சமாரியன் என்ன செய்தார்?
2. யோனாத்தான் தாவீதை எவ்வாறு நேசித்தார்?
3. கொர்நெலியு வசனத்தினை கேட்க என்ன செய்தார்?
4. மொர்தெகாய் யூதர்களை காப்பாற்ற என்ன செய்தார்?
5. நாம் மற்றவர்களை எப்படி நேசிக்க வேண்டும்?

அன்போடு நன்மை செய்யுங்கள்..

அன்புள்ளம் கொண்ட சகோதரிகளே ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

பிரியமானவர்களே, இந்த மாதம் நாம் தொற்காள் பற்றி சில காரியங்களை வேதத்தில் இருந்து கற்றுக் கொள்ளலாம். கிறிஸ்தவ பெண்களாகிய நாம் நம்மை போல பிறரை நேசிக்க என்ன செய்ய வேண்டும்? என்பதை வேதத்தின் துணைக் கொண்டு தெரிந்துகொள்வோம்.

தொற்காளிடமிருந்து நாம் நிறைய நற்பண்புகளை கற்றுக்கொள்ள முடியும், அவள் மிகுந்த இரக்கம், உதவி செய்யும் குணம் உடையவராக இருந்தாள். ஏழைகள் மீது தயவு மிக்கவராக இருந்தார். சுயநலமற்றவராகவும் மற்றும் கடினமாக உழைக்கும் மனமுடையவராகவும் இருந்தாள்.

அப் 9:36 "யோப்பா பட்டணத்தில் கிரேக்கப் பாஷையிலே தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள்; அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டுவந்தாள்.

நாம் வாசித்த வசனப்பகுதியை பார்க்கும் போது "தொற்காள் ஒரு சீஷி" என்று சொல்லப்படுகிறது. அப்படி என்றால் அவள் வேதத்தை வாசித்து, கற்றுக் கொண்டது மட்டுமல்ல, அதின்படி நடக்கவும் செய்து இருக்கிறாள். தான் நம்பும் ஆண்டவரை பிறருக்கு தன் வாழ்வின் மூலமாக வெளிப்படுத்தி இருக்கின்றாள். நாமும் தருணம் கிடைக்கும் போது எல்லாம் வசனத்தை கற்றுக்கொள்ள வேண்டும். அதின்படி வாழ தினமும் முயற்சிகளை எடுக்க வேண்டும்.

நாம் தொடர்ந்து அவர்களைப் பற்றி படிக்கும் போது அவர்கள் தேவ மகிமை விளங்கும் படியாக குறிப்பாக சபையில் உள்ள விசுவாசிகளுக்கும், விதவைகளுக்கும் தான் பெற்ற கிறிஸ்துவின் அன்பினை வெளிப்படுத்தி இருக்கிறாள். தேவனுடைய பிள்ளைகளாக அநேகர் மனமாற்றமடைய காரணமாக இருந்திருக்கின்றார் என்றும் சொல்லலாம் **(அப் 9:41-42)**.

அழிந்து போகின்ற பொருட்களினால் நண்பர்களை சம்பாதித்து, தான் பெற்ற அழிவற்ற ராஜ்ஜியத்தில் அவர்களும் வந்தடைய காரணமாக இருந்திருக்கின்றாள். அவள் நற்கிரியைகளையும் தான தர்மங்களையும் மிகுதியாக செய்தாள் என்று கர்த்தருடைய வார்த்தை அவளை பற்றி சாட்சி பகர்வதிலிருந்து நாம் அறிய முடிகின்றது.

அவள் மரித்த போது, பரிசுத்தவான்களும், விதவைகளும் அவளைப் பற்றி நற்சாட்சி சொன்னார்கள். தொற்காள் நன்மைகளை மறைமுகமாக செய்திருந்தாள். பெற்றவர்கள் வெளியரங்கமாக்கினார்கள். கர்த்தரும் வெளியரங்கமாக பலனளித்தார். மரித்த அவள் உயிரோடு எழுப்பப்பட்டாள்.

நாம் சிறிதோ அல்லது பெரிதோ பிறருக்கு ஓயாமல் உதவி செய்யும்போது நாம் அவர்கள் மனதில் இடம் பிடித்துவிடுகின்றோம். தேவ பிள்ளைகளாக நாம் பல ஆத்துமாக்களை இதின் மூலம் அவருக்காக ஆதாயப்படுத்திக் கொள்ளலாம். நன்மை செய்வதில் நாம் சோர்ந்துபோகாமல் இருக்க வேண்டும் **(2 தெச 3:13)**. எப்படி எல்லாம் பிறருக்கு நன்மை செய்யலாம் என்று வகைகளை ஏற்படுத்தி பிறருக்கு உதவ வேண்டும். பிறருக்கு உதவி செய்வதில் தொற்காள் உண்மையாக இருந்துள்ளாள். பிறர் இரட்சிக்கப்பட ஊழியம் செய்வதே நம் தலையாய கடமையாக இருக்க வேண்டும்.

நாம் எப்படி இருக்கின்றோம்? பெண்களாகிய நமக்கு துணிகளை சேமித்து வைப்பதில் நாட்டம் இருக்கின்றதா? பிறருக்கு பகிர்வதில் நாட்டம் இருககின்றதா? என்னிடம் பாருங்கள் எல்லாவித உடையும் இருக்கின்றது என சொல்வதில் பெருமைக் கொள்கின்றோமா? இயலாதவர்களுக்கு அவைகைளை பகிர்ந்து கொடுத்து, நான் கிறிஸ்துவை போன்று இருக்கின்றேன் என்பதில் மகிழ்ச்சிக் கொள்கின்றோமா? நம்மை நாமே சற்று நிதானித்து, நம்மை போல பிறரை நேசிக்கின்றவர்களாக இருப்போம். அழிந்து போகின்ற பொருட்களினால் அநேகரை அழியாத விண்ணரசிற்குள் வரவழைப்போம்.

— பி. பெவர்லி லிதியா கிங்ஸ்லி

பிரியமான வாலிப தம்பி தங்கைகளுக்கு ஆண்டவர் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாதம் அன்பை குறித்து சிலவற்றை படிக்க ஆயத்தப்படுவோம். ஏனென்றால் அன்பு ஒரு சிறந்த மனிதனை உருவாக்குகிறது. அன்பினால் உறவுகள் கட்டப்படுகின்றன. மோசமான விரோதிகள் கூட அன்பு என்கின்ற ஒன்றினால் 'நெருங்கிய' நண்பர்களாகின்றனர். அன்பு என்பது பெற்றுக்கொள்வதாக இல்லாமல் கொடுப்பதாகவே இருக்கின்றது. உதாரணமாக ஒரு தாயின் அன்பு, தந்தையின் அன்பு இவை எல்லாவற்றை காட்டிலும் கடவுளின் அன்பு எல்லாமே எதையாவது ஒன்றை கொடுப்பதாக இருக்கின்றது. இவற்றில் பேரன்பாக கடவுளின் அன்பே திகழ்கின்றது. காரணம் மானுடத்தின் பாவ விடுதலைக்காக கடவுள் தம்முடைய சொந்த குமாரனாகிய இயேசுவையே கொடுத்து கடவுளின் அன்பை வெளிப்படுத்தியுள்ளார்.

II சாமுவேல் 23ம் அதிகாரத்தில் தாவீது எதிரி நாட்டுப்படைகளுடன் சண்டையிட்டு கொண்டிருக்கின்றனர். இந்த வேளையிலே அவருக்கு தாகமெடுக்கின்றது. தண்ணீர் கேட்கின்றார். அருகாமையில் இருக்கும் நீரை கேட்கவில்லை கிட்டதட்ட 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கிணற்றில் இருந்து தான் தனக்கு தண்ணீர் வேண்டும் என்று கேட்டார். இந்த தாவீதுக்கு மூன்று பராக்கிரமசாலிகள் கனயில் இருந்தனர். அவர்கள் மூவரும் போய் தண்ணீர் கொண்டு வரும்படி செல்கின்றனர். இது நீண்ட நடைப்பயணமாக மட்டும் இருந்துவிடவில்லை, தண்ணீர் எடுக்க அவர்கள் எதிரிகளின் நிலங்கள் வழியாய் போய், எடுக்க வேண்டிய கடினமான சூழல் அங்கே உருவாகியிருந்தது. ஏனென்றால், தாவீது பெத்லகேமின் ஒலிமுக வாசலில் இருக்கிற கிணற்றின் தண்ணீரை கேட்டிருந்தார். இது எதிரி படைகளின் நில அளவில் உள்ளது. ஒரு ஆபத்தான வேலையாகவே இருந்தது.

இந்த மூன்று பராக்கிரமசாலிகளும் எதிரிகளின் நிலத்திற்குள் புகுந்து அந்த கிணற்றை அடைந்து, அதிலிருந்து தண்ணீரும் எடுத்து வந்துவிடுகின்றனர். ஆனால் அவர்கள் தாவீதிடம் வந்தபோது, அவர் அந்த தண்ணீரை குடிக்க மறுத்துவிட்டார். முதலில் இது மிகவும் நன்றியற்றதாக தாவீதுக்குப்பட்டது. தங்கள் உயிரைப்பனயம் வைத்து என்ற அவர்களை பார்த்து தண்ணீரை குடிக்காமல் தரையில் ஊற்றினார். அவர்களின் இந்த செயலை புரிந்து கொண்ட தாவீது இது அவர்களின் இரத்தம் என்று அறிக்கையிடுகின்றார். அது குடிக்க மறுத்து, தங்கள் ராஜாவின் மேல் அந்த மூன்று பராக்கிரமசாலிகளுக்கு இருக்கின்ற மரியாதையை, அக்கறையை, விசேஷமாக அன்பை அவர் புரிந்துகொள்கின்றார். அவர்கள் காண்பித்த அன்பை தாவீது ராஜாவும் திரும்ப அவர்களுக்கு தண்ணீரைவிட அவர்கள் மூவரும் முக்கியம் என்கின்ற அன்பின் அறிக்கையை வெளிப்படுத்துகின்றார்.

பொதுவாக வாலிப வயதில் நமக்கு நம்முடைய விஷயத்தில் கவனம் அதிகம். பிறருடைய சிந்தனைகள், யோசனைகளை பற்றி கவலைப்பட மாட்டோம். இது ஒரு மோசமான மனப்பான்மை I யோவ 4:7 சொல்கிறது. ஒருவரிலொருவர் அன்பாயிருக்க கடவோம் என்று, எனவே மற்றவர்களையும் குறிப்பாக நம்முடைய வீடுகளிலிருப்பவர்களை முதலாவது நேசிக்க அவர்கள் மீது அன்பு காட்ட பழகுவோம். இன்றைக்கு வீடுகளெல்லாம் இயந்திர மயமாக்கப்பட்ட நிலையில், எல்லாரும் Mobile Phoneக்கு அதிகமாக அடிமைகளாக இருக்கிறோம். தனிப்பட்ட நிலையில் வீட்டாரோடு அதிகம் பேசுவதை தவிர்த்து விடுகின்றோம். முதலில் நாம் வீடுகளில் அன்புகாட்ட, நேசிக்க ஆயத்தமாவே நமக்காக எல்லாவற்றையும் பார்த்து பார்த்து செய்கிற அம்மாவிற்கு அன்பை காட்டுவோம். நம்முடைய எதிர்காலம் நன்றாக இருக்க வேண்டும் என அயராது உழைக்கின்ற அப்பாவிற்கு அன்பை காட்டுவோம். அம்மா, அப்பாவின் சொல்லை மதிப்போம், கீழ்ப்படிவோம்.

முதலில் வீட்டாரிடம் அன்பு செலுத்த ஆரம்பித்தால் தான் நம்மால் நம்மைப் போல பிறரையும் நேசிக்கின்ற கிறிஸ்தவ அன்பு வெளிப்படும்.

– உங்கள் அண்ணன்
JP

அன்பினால் உதவுங்கள்..

கடவுளுக்கு பிரியமான செல்லப் பிள்ளைகளா! எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள்? நல்லாயிருக்கிறீர்களா!

இப்பக்கூட சமாரியா என்ற ஒரு ஊரில் உள்ள அண்ணாவை பற்றி பைபிளில் சொல்லப்பட்டுள்ளது, இந்த பைபிள் சம்பவத்திலிருந்து ஒரு நல்ல குணத்தை கற்றுக் கொள்ளலாமா?

எருசலேமில் ஒரு அண்ணா இருந்தாங்க, அவங்க என்ன செய்தாங்க தெரியுமா? தெரிந்து கொள்ள ஆசையா இருக்கா! அந்த அண்ணா எருசலேமிலிருந்து எரிக்கோவுக்கு கையில் நிறைய காசு எடுத்துக்கொண்டு போய்க் கொண்டிருந்தாங்க, அப்ப என்ன நடந்தது தெரியுமா? திருடர்கள் வந்து அந்த அண்ணனை அடிஅடி என்று அடித்து, எழுந்துகூட நடக்க முடியாத அளவுக்கு அந்த அண்ணனை அடித்து காயப்படுத்தி பிறகு அந்த அண்ணா கையில் இருந்த பணத்தை எல்லாம் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அந்த அண்ணா பாவம்தான,

இப்ப அந்த அண்ணா வலித்தாங்க முடியாமல் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கிறாங்க, இப்ப அந்த வழியாய், ஒரு ஆசாரியன் வருகிறார், அவங்களை பார்த்ததும் எனக்கு உதவி செய்வார் என்று நினைத்தாங்க, ஆனால் அந்த அடிபட்ட அண்ணாவை பார்த்துவிட்டு உதவி செய்யாமல் போய்விடுகிறார்.

அடுத்து ஒரு லேவியர் அந்த வழியாய் வருகிறார், அவங்களாவது எனக்கு உதவி செய்யமாட்டாங்களா! என்று ஏக்கத்தோடு பார்த்தாங்க, ஆனால் அவங்களும் அந்த அண்ணனை பார்க்கிறார் கொஞ்சம்கூட உதவி செய்யாமல் போய்விடுகிறார். பாவம் அந்த அண்ணா திருடர்கள் அடித்ததினால் வலிதாங்க முடியாமல் ரொம்ப கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறாங்க.

இப்ப அந்த வழியாய் ஒரு அண்ணா வராங்க, யார் தெரியுமா? சமாரிய நாட்டிலிருந்து அந்த அண்ணா தற்செயலாய் வராங்க, அந்த அடிப்பட்ட அண்ணாவை பார்த்து மனது உருகி, கிட்டபோய் அந்த அண்ணாவின் காயத்தில்

மருந்து வைத்து (ஒலிவ எண்ணெய்) கட்டி, குடிக்க கொஞ்சம் திராட்சரசமும் கொடுத்து, தன் சொந்த வாகனத்தில் ஏற்றி, சத்திரத்திற்கு அழைத்து கொண்டுபோய், அங்கு உள்ள மருத்துவரிடம் சொல்லி அந்த அண்ணாவுக்கு மருந்து கட்டுகிறாங்க.

அதுமாத்திரம் அல்ல அங்கேயே ஒருநாள் கூடவே இருந்தாங்க, இப்ப அந்த அண்ணா புறப்படும்போது, மருத்துவரிடம் இரண்டு பணம் கொடுத்து நல்லா வைத்தியம் பாருங்க, பணம் போதவில்லை என்றால் நான் திரும்பி வருவேன், வந்து உங்களுக்கு தேவையானதை தருகிறேன் என்றார். எவ்வளவு நல்ல அண்ணா!

பிள்ளைகளா! முதலில் இரண்டுபேர் வந்தாங்க, ஒரு டம்ளர் தண்ணீர் கூடக்கொடுக்கவில்லை, ஆனால் இந்த அண்ணா எவ்வளவு நன்மை செய்தாங்க, தனக்கு இப்படி ஒரு பிரச்சனை வந்தால், மற்றவர்களிடம் எவ்வளவு உதவி எதிர்பார்ப்பாங்களோ, அதை அந்த அண்ணா மற்றவர்களுக்கு செய்தாங்க.

கடவுளுக்குரிய செல்லங்களா! நீங்களும் சபையில் உள்ள பெரியவர்களுக்கு, ஊழியக்காரருக்கு, உங்க அம்மா, அப்பாவுக்கு, உங்க கூட பிறந்தவர்களுக்கு, இந்த அண்ணாவைப்போல நன்மை செய்வீர்களா! கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்.

மனப்பாட வசனம் : யாக்கோபு 4:17 "ஆதலால், ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்."

– அன்பு ஏசுதாஸ்

அன்பினாலே காப்பாற்றுங்கள்..

ஹாய் குட்டீஸ் ! உங்கள் எல்லாருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினாலே ஸ்தோத்திரங்கள் மற்றும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இஸ்ரவேலரில் மொர்தெகாயும், எஸ்தரும் மிக முக்கியமானவர்கள். பெர்சிய நாட்டில் வாழ்ந்து வரும் இந்த எஸ்தர் அந்நாட்டு ராணியாக இருக்கிறார், அவளுடைய பெரியப்பா மகன் தான் இந்த மொர்தெகாய் என்பவர். இவர் ராஜாவுக்கு அடுத்த ஸ்தானத்தில் (உயர்வான இடத்தில்) இருக்கிறார்.

இப்படிப்பட்ட இந்த பெரிய இடம் இவர்களுக்கு எப்படி கிடைத்தது தெரியுமா? செல்லங்களா ! எஸ்தர் சிறுமியாக இருந்தபோதே அவளுடைய அப்பா அம்மா இறந்துவிட்டார்கள். அதனால் மொர்தெகாய்தான் அவளை வளர்த்து ஆளாக்கினார். இந்த நேரத்தில் பெர்சிய ராஜா அகாஸ்வேருக்கு சூசான் நகரத்தில் ஓர் அரண்மனை இருந்தது. இந்த அரண்மனை ஊழியக்காரர்களில் மொர்தெகாயும் ஒருவர். ராஜாவின் மனைவி எஸ்தர், ராஜா ஒரு புதிய மனைவியைத் தேர்ந்தெடுத்து அவளை ராணியாக ஆக்குகிறார். அவர் தேர்ந்தெடுத்த அந்தப் பெண் யார் தெரியுமா? அவள்தான் அழகிய இளம் பெண் எஸ்தர்.

இந்த அரண்மனையில் இருந்த மற்றொரு ஆள் (நபர்) தான் ஆமான். எல்லா மக்களும் இந்த ஆமானை மதிக்க வேண்டும். தன்னை மட்டுமே வணங்க வேண்டும் என்று நினைப்பவன் இந்த ஆமான். எல்லாரைப் போலவே மொர்தெகாயும் கூட தன்னைக் குனிந்து வணங்க வேண்டுமென்று ஆமான் விரும்புகிறான். ஆனால், மொர்தெகாய் அப்படிச் செய்யவில்லை. இதனால் ஆமானுக்கு பயங்கர கோபம் வருகிறது. கோபத்தில் அவன் என்ன செய்கிறான் தெரியுமா?

அவனைப் பற்றியும் (மொர்தெகாய்), அவனுடைய மக்கள் இஸ்ரவேலரைப் பற்றியும் நிறைய பொய்களை ஆமான் ராஜாவிடம் சொல்கிறான். "ராஜா அவர்கள் உம்முடைய சட்டங்களுக்குக் கீழ்ப்படியாத கெட்ட ஜனங்கள். அவர்கள் கொல்லப்பட வேண்டும்" என்று சொன்னான். ராஜா தன் மனைவி எஸ்தர் இஸ்ரவேல் நாட்டுப் பெண் என்பது ராஜாவுக்கு தெரியாது. அதனால், ஆமானுடைய பேச்சைக் கேட்டு ஒரு குறிப்பிட்ட நாளில் எல்லா இஸ்ரவேலரையும் கொல்லும் படியாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்.

இந்த சட்டத்தைக் கேட்ட மொர்தெகாய் இதை தடுத்து நிறுத்தி இஸ்ரவேலரைக் காப்பாற்றும்படி எஸ்தரிடம் சொல்கிறார். ராஜா அழைத்தால் தான் இராஜாவிடம் சென்று யார் வேண்டுமானாலும் பேச வேண்டும். ஆனால், எஸ்தர் அனுமதி பெறாமலேயே போய் பேசுகிறாள்.

இராஜா, அவளுடைய பேச்சைக் கேட்கிறார். தன் நாட்டு மக்களை ஆமான் கொல்லப் போகிறான். அதை தடுத்துநிறுத்தும்படி ராஜாவிடம் வேண்டுகிறாள். இதை கேட்ட ராஜா ஆமானின் சதி செயலைப் புரிந்துகொண்டு மொர்தெகாயையும், அவளுடைய இஸ்ரவேல் மக்களையும் காப்பாற்றுகிறார். இதன்பின் ஆமானுக்குத் தண்டனைக் கொடுக்கிறார். மொர்தெகாய்க்கு பதவியைக் கொடுக்கிறார். முடிவில் அவனும் அவளுடைய ஜனங்களும் காப்பாற்றப்பட்டு, தேவனை மட்டுமே தொழுதுகொள்ள சட்டம் இயற்றினார்.

இந்த சம்பவத்தைப் போலவே நாமும் மற்றவர்களை பகைக்காமல் நேசிக்க வேண்டும். இயேசு கிறிஸ்து நம்மை நேசிப்பதுபோல. நாமும் மற்றவர்களை நேசிக்க வேண்டும். என்ன செல்லங்களா? நீங்களும் மற்றவர்களிடம் அன்பாக இருப்பீர்களா?

மனப்பாட வசனம் : 1 யோவான் 4:11

"பிரியமானவர்களே தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூறக் கடனாளிகளாயிருக்கிறோம்."

– ரா. ஏஞ்சலின் கமலம்

உண்மையான அன்புகூறுங்கள்..

ஹாய் குட்டீஸ்! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இஸ்ரவேலின் முதல் ராஜாவான சவுலுக்கு யோனத்தான் என்ற மகன் இருந்தார். சவுல் ராஜாவுக்கு தன் மகன் தான் தேசத்தின் அடுத்த அரசனாக வரவேண்டுமென்று விருப்பம். ஆனால் கர்த்தர் தாவீது என்ற ஒரு வாலிபனை அடுத்து ராஜாவாக அபிஷேகம் பண்ணினார். தாவீதின் செல்வாக்கு சவுல் ராஜாவைவிட இஸ்ரவேல் நாட்டில் பெருகிக்கொண்டே வந்தது. அதினால் சவுல் ராஜா தாவீதை அதிகமாக வெறுக்க ஆரம்பித்தார். ஆனால் யோனாத்தானும் தாவீதும் ஒருவரை ஒருவர் உயிருக்கு உயிராக சிநேகித்து வந்தார்கள்.

ஒரு நாள் சவுல் ராஜா தன் மகனாகிய யோனாத்தானையும் தன் ஊழியக்காரர்களையும் ஒன்றாகக் கூட்டி தாவீதைக் கொலை செய்ய ஆலோசனை பண்ணினான். யோனாத்தான் தன்னைப்போலவே தாவீதை நேசித்ததினால் இதை தாவீதுக்கு தெரிவித்து அவரை பாதுகாப்பாக இருக்கச் சொன்னார். அதுமட்டுமல்லாமல் தன் தகப்பனாகிய சவுலிடம் தாவீது உமக்கு நன்மையானவைகளை தான் செய்திருக்கிறான்; அதினால் அவனை கொன்று குற்றமில்லாத இரத்தத்திற்கு விரோதமாக பாவஞ் செய்யாதீர்கள் என்று சொல்லி தாவீதிற்காக பரிந்து பேசினான்.

மீண்டும் சவுல் தாவீதை கொலை செய்யும்படி ஆட்களை அனுப்பினார். இதை தெரிந்து கொண்ட யோனாத்தான் தாவீதை காப்பாற்றும்படி அவனிடத்திற்கு சொல்லி அனுப்பி அவனை சவுலின் கைகளிலிருந்து தப்பிக்க செய்தான். யோனாத்தான் கடைசி வரைக்கும் தன் உயிரை போல பிறரின் உயிரையும் நேசி என்பதற்கு உதாரணமாக தாவீதின் உயிரையும் நேசித்து காப்பாற்றினான்.

குட்டீஸ்! நம்மை யாராவது தவறாக பேசினால் நமக்கு பிடிக்காது அதுபோலத்தான் பிறரையும் நாம் தவறாக பேசக்கூடாது. நம்மிடம் யாராவது பொய் பேசினால் நமக்கு பிடிக்காதது போல நாமும் மற்றவர்களிடம் பொய் பேசக்கூடாது. அதினால் நம்மை நாம் நேசிப்பது போல பிறரையும் நேசிக்க வேண்டும். குறிப்பாக நம் வீட்டிலுள்ளவர்களை,

உடன்பிறந்தவர்களை, உடன் படிக்கிற நண்பர்களை நேசிக்க வேண்டும். நாம் நன்றாக வாழ்வதுபோல் அவர்களும் வாழ அவர்களை நேசிக்க வேண்டும் அவர்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும். யோனாத்தான் தாவீதை இவ்வாறாக நேசித்ததினால் யோனாத்தான் இறந்த போது தாவீது அவரைப் பற்றி நீ உன்னைப் போலவே என்னை அதிகமாக நேசித்தாய், உன் அன்பு விசேஷமானது என்றான்.

மனப்பாட வசனம் : "அவனை நொக்கி; உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயா."

– குயினி பிரதீப்

சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. G. ஜெர்லின் – தேவகோட்டை ரஸ்தா
2. S. ஜுடோ லியோ – தேவகோட்டை ரஸ்தா
3. M. ஜோனா – கரூர்
4. M. ராஜா – கரூர்
5. J. நவீன் பீட்டர் – மதுரை
6. J. கிறிஸ்டினா ஜாய்ஸ் – மதுரை
7. A. ஹானாஜோதி – மதுரை
8. A. கார்பஸ் பிலேமோன் – மதுரை
9. S. சாராள் – மதுரை

அன்பினாலே இரட்சிப்பின் வழிகாட்டுங்கள்..

கொர்நெலியு என்பவர் இத்தாலிய நாட்டின் படை பிரிவில் நூற்றுக்கு அதிபதியாக இருந்தவர். இவர் செசெரியா நகரை சேர்ந்தவர். இவர் இறைவனிடம் மிகுந்த அன்பு கொண்டவர். அவரை போலவே அவர் குடும்பத்தினரும் இறைவனிடம் மிகுந்த அன்பும், அவருக்கு கீழ்ப்படிந்தும், தினமும் இறைவனை நோக்கி ஜெபம் செய்கின்றவராகவும் இருந்தார். ஒரு நாள் இவரிடம் தேவதூதன் வந்து யோப்பா நகரில் உள்ள ஆண்டவரைப் பற்றி அறிவிக்கின்ற ஊழியக்காரரான பேதுருவை அழைத்து வரச் செய்யும்படி சொன்னார்.

கொர்நெலியும் உடனே தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து உடனே பேதுருவை அழைத்துவர ஆள் அனுப்பினார் அவர். பேதுருவும் வந்தார். அவரிடம் நான் மட்டும் அமர்ந்து ஆண்டவருடைய வார்த்தையைக் கேட்காமல் தன் குடும்பத்தார், உற்றார், உறவினர், பக்கத்துவீட்டுக்காரர்கள், நண்பர்கள் அனைவரும் கூடிவரச்செய்து ஆண்டவருடைய வார்த்தையைக் கேட்கும்படி செய்தார். நாம் ஆண்டவர் மேல் அன்பாயிருந்தால் அவரைப்பற்றி மற்றவருக்கு சொல்ல வேண்டும். கொர்நெலியு தான் மட்டும் ஆண்டவரைப்பற்றி அறிந்து கொண்டதோடு இல்லாமல், தனக்குத் தெரிந்த அனைவருக்கும் ஆண்டவரைப் பற்றி அறிந்து கொள்ளும்படி உதவி செய்தார். ஆகையால் நாமும் நாம் அறிந்து கொண்ட நம்முடைய உயிருள்ள ஆண்டவரை நமக்குத் தெரிந்த அனைவருக்கும் அறிவிக்க

வேண்டும் நாம் பெற்ற நன்மையை அனைவரும் அறிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும்.

மனப்பாட வசனம் : 1 யோவான் 3:18 "என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்."

– பிரியா ஆண்டனி

வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

ஜூலை மாத கேள்விகள்

1. ஆண்டவர் இயேசு என்னுடைய கற்பனையாயிருக்கிறது என்று சொன்னது என்ன?
2. சகோதரனிடத்தில் அன்புகூறாதவன் மற்றும் பகைக்கிறவனை குறித்து யோவான் சொன்னது என்ன?
3. தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் என்ன செய்ய வேண்டும்?
4. புதிதாக்கப்பட்ட புதிய மனிதனை தரித்திருக்கின்ற படியினால் என்ன பேச கூடாது?
5. ஒருவர் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நாம் செய்ய வேண்டியது என்ன?
6. திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன், உபதேசிக்கிறவனுக்கு செய்ய வேண்டியது என்ன?
7. எதனை எத்தனை இன்பமும் நன்மையுமானது என சங்கீதக்காரன் சொல்கின்றார்?
8. பிறனிடத்தில் அன்புகூறுகின்றவன் எதனை நிறைவேற்றுகின்றார்?
9. யாரையும் எப்படி எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்கும்படி ஆண்டவர் இயேசு சொன்னார்?
10. ஆண்டவர் இயேசு, யாரை தன்னுடைய வசனங்களை கைக்கொள்ளமாட்டார்கள் என்கின்றார்?

பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 5-08-2023

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

சென்ற இதழ் பதில்கள்

1. பிலேமோன் 1,2
2. பிலேமோன் 4
3. எபிரேயர் 13:16
4. 1 யோவான் 2:1
5. நீதிமொழி 12:4
6. நீதிமொழி 31:10
7. 1 யோவான் 4:12
8. ரோமர் 13:8
9. கலா 6:6
10. கிபி 60:62

சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. A. டேவிட் ஜெயசந்திரன் – மதுரை
2. G. பீற்றர் பால்ராஜ்– தூத்துக்குடி
3. Mrs. P. சமாதானம் பீட்டர் – விருதுநகர்
4. Mrs. ஹெலன் திலக் – தூத்துக்குடி
5. Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் – தூத்துக்குடி
6. Mrs. D.J. அன்பு சுதந்திரம் – நெல்லை
7. G. வைலட் கிறிஸ்டோபர் – தளவாய்புரம்
8. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
9. Mrs. G. ஏஞ்சலம்மாள் – மதுரை
10. Mrs. E. ஈஸ்வரி முருகன் – கரூர்
11. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
12. A. லலிதா – புதுக்கோட்டை
13. Mrs. மேரி ராஜ் – மதுரை
14. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
15. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
16. Mrs. சுந்தரபாய் வில்லியம் – புதுக்கோட்டை
17. Mrs. R.P. டேவிட் – சேலம்
18. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
19. P.S. ருக்மணி – கோபி
20. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
21. N. ஜான் செல்லையா – மதுரை
22. J. ஜெயராணி ஜான் செல்லையா – மதுரை
23. M.S. ஜேம்ஸ் – திண்டுக்கல்
24. M. ஸ்டெல்லா ஜெபகுமார் – நெல்லை
25. Mrs. ஹெப்ஸிமா தாமஸ் – படப்பை
26. Mrs. செல்வமணி – சேலம்
27. Mrs. பியூலா ஜேசுராஜன் – புதுச்சேரி
28. Dr. D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
29. Dr. கிறிஸ்டோபர் சாந்தகுமார் – மதுரை
30. Mrs. A. இமல்டா சுந்தர்சிங் – ஈரோடு
31. M. விக்னேஷ் – அரக்கோணம்
32. Mrs. R. சரோஜா – தென்கலம்
33. Mrs. மீனாள் – மூலனூர்
34. Mrs. ஜெமி நல்லையா – கோவை
35. S. லீதியாள் – தஞ்சாவூர்
36. S. டேவிட் சாந்தகுமார் – வல்லம்
37. Mrs. S. பாக்கியராஜம் – மதுரை
38. J. ஜான்ஸி – ஆனைமலை
39. Mrs. பெரில் பாஸ்கர் – படப்பை
40. J. விஜய் – மதுரை
41. Mrs. S. சூரியா சௌந்தர்பாண்டி – மதுரை
42. Mrs. ஆனி விக்டோரியா – சென்னை
43. K. ராஜா – அந்தியூர்
44. Mrs. ஹெலன் திலக் – புதுக்கோட்டை
45. P. ஷைனி – காங்கேயம்
46. S. ஐசுவரியா – காங்கேயம்
47. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Place of Publication : Arasaradi, Madurai
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at Classic Printers & Binders Madurai-2 ✆ 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2021 - 2023
Date of Publication : 8th July 2023
Posted at Arasaradi HPO on 10th 11th July 2023

கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்

அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

தபால் வழி பைபிள் பாடங்கள்

கைபிரதிகள்

உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

BIBLE STUDY BOOKS IN ENGLISH



AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI
45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : biblecourseindia@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To